

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, மதுரையில் நடைபெற்ற 19 வயதிற்குட்பட்டோருக்கான YonexSunrise அகில இந்திய ஜூனியர் தரவரிசை இறகுப்பந்து போட்டியில் கலப்பு இரட்டையர் பிரிவில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி அவர்களின் பேத்தி வர்ணா பிரபு ஆனந்த் மற்றும் அவருடன் இணைந்து விளையாடிய மித்திலேஷ் பி. கிருஷ்ணன் ஆகியோர் நேற்று (30.10.2025) மதுரையில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (30.10.2025) மதுரையில், சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பஹ்ரைனில் நடைபெற்ற 3 ஆவது ஆசிய இளையோர் விளையாட்டு தடகள போட்டியில் 2 வெள்ளிப் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த தடகள வீராங்கனை எட்வினா ஜேசனுக்கு நேற்று முன்தினம் (29.10.2025) 25.00 லட்சம் ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலையை வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அடக்குமுறை சட்டங்களின்

# ஆதிக்கத்திலிருந்து நம்மக்களை மீட்டவர்!

## பசும்பொன் தேவர் திருமகனார் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, அக். 31–

நாட்டு விடுதலைக்குப் போராடிய தீரர் முத்துராமலிங்கத் தேவர் திருமகனாரின் ஜெயந்தியில் அவரது திருவுருவச் சிலைக்கும், பசும்பொன் நினைவிடத்திலும் மரியாதையைச் செலுத்திய பின்பு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

**அடக்குமுறைச் சட்டங்களின் ஆதிக்கத்தில் இருந்து நம் மக்களை மீட்டு, நேதாஜி அவர்களின் நம்பிக்கைக்குரியவராக நாட்டு விடுதலைக்குப் போராடிய தீரர் முத்துராமலிங்கத் தேவர் திருமகனாரின் ஜெயந்தியில் அவரது திருவுருவச் சிலைக்கும், பசும்பொன் நினைவிடத்திலும் எனது மரியாதையைச் செலுத்தினேன். மேலும் மதுரை தெப்பக்குளத்தில் மானம் காத்த மருதிருவர் திருவுருவச் சிலைக்கும் மலர் மாலை அணிவித்து வணங்கினேன்.**

**பசும்பொன்னில் மாபெரும் திருமண மண்டபம் கட்டப்படும் என்ற புதிய அறிவிப்பை வெளியிட்ட மனநிறைவுடன் சென்னைக்குத் திரும்புகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### நாகர்கோவில் மாநகராட்சி மேயரின் வார்டான 4 வது வார்டுக்குட்பட்ட

# பெருவிளை பகுதியில் வார்டு அளவிலான சிறப்புக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

நாகர்கோவில், அக். 31–

நாகர்கோவில் மாநகராட்சி மேயரின் வார்டான 4 வது வார்டுக் குட்பட்ட பெருவிளை பகுதியில் (29.10.2025 – புதன்கிழமை) நேற்று முன்தினம் வார்டு அளவிலான சிறப்புக் கூட்டம் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சாலை வசதி, தெருவிளக்கு பராமரிப்பு, குடிநீர் வசதி போன்ற அடிப்படை சேவைகளை மேம்படுத்திட வேண்டி பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். அதனை மேயர் ரெ. மகேஷ் பெற்றுக் கொண்டு அனைத்து கோரிக்கைகளும் விரைவில் செய்து முடிப்பதாக கூறினார்.

கூட்டத்தில் மாநகராட்சி உதவி ஆணையர் பாலசுந்தரம், சுகாதார அலுவலர் பகவதி பெருமாள், சுகாதார ஆய்வாளர் வித்யா, மாநகராட்சி அதிகாரிகள், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் முகமது பஷீர், நாகர்கோவில் மாநகர மாணவர் அணி அமைப்பாளர் முஹம்மது ஸாலிஹ் உட்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தடகளப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற

# 8 விளையாட்டு வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.40.50 லட்சம் ஊக்கத் தொகை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, அக். 31 –**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 3வது ஆசிய இளைஞர் விளையாட்டு தடகளப் போட்டி மற்றும் 4வது தெற்காசிய (SAAF) சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 8 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு நேற்று முன்தினம் (29.10.2025) மொத்தம் 40.50 லட்சம் ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலைகளை வழங்கி, மேலும் பல பதக்கங்கள் வெல்ல வாழ்த்து தெரிவித்தார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியிலிருந்து 2025 அக்டோபர் 24 முதல் 26 வரை ராஞ்சியில் நடைபெற்ற 4வது தெற்காசிய (SAAF) சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் 110 மீட்டர் தடை தாண்டும் பேட்டி பிரிவில் புதிய போட்டி சாதனையுடன் தங்க பதக்கம் வென்ற தடகள வீரர் ஆர்.மானவ் அவர்களுக்கு 2,00,000 ரூபாய்க்கான காசோலை, 100 மீட்டர் தடை தாண்டும் பிரிவில் புதிய போட்டி சாதனையுடன் தங்கப்பதக்கம் வென்ற தடகள வீராங்கனை கே.நந்தினி அவர்களுக்கு 2,00,000 ரூபாய்க்கான காசோலை, 4x400 மீட்டர் (கலப்பு) ரிலே பிரிவில் தங்கப் பதக்கம், 4x400 மீட்டர் (பெண்கள்) ரிலே பிரிவில் தங்கப் பதக்கம், 400 மீட்டர் பிரிவில் வெள்ளி பதக்கம் மற்றும் 400 மீட்டர் தடைதாண்டுதல் பிரிவில் வெண்கல பதக்கம் என 4 பதக்கங்கள் வென்ற ஒலிம்பா ஸ்டெஃபி அவர்களுக்கு 6,50,000 ரூபாய்க்கான காசோலை, 4x400 மீ (ஆண்கள்) ரிலே பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற தடகள வீரர் எம்.ஷரன் அவர்களுக்கு 1,50,000 ரூபாய்க்கான காசோலை, டிரிபிள் ஜம்ப் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற தடகள வீரர் வி. தினேஷ் அவர்களுக்கு 1,50,000 ரூபாய்க்கான காசோலை, உயரம் தாண்டுதல் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற தடகள வீரர் ஆதர்ஷ் ராம் அவர்களுக்கு 1,00,000 ரூபாய்க்கான காசோலை, நீளம் தாண்டுல் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற தடகள வீராங்கனை பவானியாதவ் பகவ் அவர்களுக்கு 1,00,000 ரூபாய்க்கான காசோலை என தடகள போட்டிகளில் பதக்கங்களை வென்ற 7 வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 15.50 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

மேலும் 3வது ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டியில் 400 மீட்டர் பிரிவில் வெள்ளிப்பதக்கம் மற்றும் மெட்லிரிலே பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற எட்வினாஜேசன் அவர்களுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 20.00 லட்சம் மற்றும் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியிலிருந்து 5.00 லட்சம் என மொத்தம் 25,00,000 ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இன்றைய தினம் பதக்கங்கள் வென்ற 8 விளையாட்டு வீரர் வீரங்கனைகளுக்கு மொத்தம் தொகை 40,50,000 ரூபாய்க்கான ஊக்கத் தொகை காசோலைகளை துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தடகள சங்க செயலாளர் திருமதி.சி.லதா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


